**சுவாமி விபுலானந்த அழகியற்கலை கற்கைகள் நிறுவகம் (எஸ்வீஐஏஎஸ்)-2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுவாமி விபுலானந்த அழகியற்கலை கற்கைகள் நிறுவகத்தின் (எஸ்வீஐஏஎஸ்) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சுவாமி விபுலானந்த அழகியற்கலை கற்கைகள் நிறுவகத்தின் (எஸ்வீஐஏஎஸ்) செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சுவாமி விபுலானந்த அழகியற்கலை கற்கைகள் நிறுவகத்தின் (எஸ்வீஐஏஎஸ்) ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சுவாமி விபுலானந்த அழகியற்கலை கற்கைகள் நிறுவகம் (எஸ்வீஐஏஎஸ்) இணங்கியிருந்ததா என்பதும்,

- சுவாமி விபுலானந்த அழகியற்கலை கற்கைகள் நிறுவகம் (எஸ்வீஐஏஎஸ்) அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சுவாமி விபுலானந்த அழகியற்கலை கற்கைகள் நிறுவகத்தின் (எஸ்வீஐஏஎஸ்) வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள்**

**பொருத்தமற்ற பெறுமதி கணிப்பீடு அல்லது மதிப்பீடு**

கணக்காய்விற்கான சான்றின்மை

| **கணக்கு விடயம்** | **பெறுமதி** | **சமர்ப்பிக்கப்படாத சான்று** | **முகாமைத்துவக் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| கட்டிடம் மற்றும் மேம்படுத்தல் | 530,139,729 | நிலையான சொத்துக்கள் பதிவேடு, விபரமான பட்டியல்கள் மற்றும் பொருள் மெய்மையாய்வு அறிக்கை | அதிகளவு பெறுமானத்தேய்வுத் தொகை அறவிடப்பட்டமை மற்றும் நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படாமை என்பன இதற்கான காரணமாகும். சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டதும் பொது ஒதுக்கம் நேர்மறையாக வரும். நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டுள்ளது. அத்துடன் திகதிகளை தரவேற்றம் செய்வதற்கு கணனி மென்பொருள் பொதி (Computer Package) துணைபுரியாததன் காரணமாக தாமதம் ஏற்பட்டிருந்தது. கலந்துரையாடலின் பின்னர் தரவை தரவேற்றம் செய்வதற்கு இன்னொரு மென்பொருளுடன் எஸ்வீஐஏஎஸ் இற்கு உதவுவதற்கு கம்பனி இணங்கியிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கணக்கு மீதியை சரிபார்ப்பதற்கு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| தளபாடம் பொருத்துக்கள் மற்றும் அலுவலக உபகரணம் | 62,094,152 | | | |
| இயந்திரம் | 31,850,145 | | | |
| விளையாட்டுப் பொருட்கள் | 1,876,481 | | | |
| ஏனைய சொத்துக்கள் | 5,962,234 | | | |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**பெறவேண்டியவைகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவக் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நிறுவகத்தின் 03 ஊழியர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 134,723 கூட்டுமொத்தமான வெள்ளக் கடன்கள் 03 ஆண்டுகளிற்கு மேலாக அவர்களது பிணைதாரர் அல்லது சேமலாப நிதியத்திலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | அவர்களது பிணைதாரர் மற்றும் சேமலாப நிதியத்திலிருந்து அவ் நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிலுவைக் கடன் மீதிகள் அறவீடு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு<br>சட்டம்/ பணிப்புரையுடனான தொடர்பு | இணங்காமை<br>விபரம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| நிதிப் பிரமாணம் 1646 | நிறுவகத்தின் 05 வாகனங்களிற்குரிய மாதாந்த செயலாற்றல் பொழிப்புக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிலிருந்து எஸ்வீஜஏஎஸ் இன் வாகனங்களிற்குரிய மாதாந்த செயலாற்றல் பொழிப்புக்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணங்களிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் தாபன விதிக் கோவை | | | |
| (i) X ஆம் அத்தியாயத்தின் 1.6.1 ஆம் பிரிவு மற்றும் XX ஆம் அத்தியாயத்தின் 3(1) ஆம் பிரிவு | கல்விசார் பதவியணியினரின் உள்வருகை மற்றும் வெளிச்செல்லல்களை உறுதிப்படுத்தாமல் மீளாய்வாண்டிற்குரிய சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 96,615,640 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | அவர்கள் 24 மணித்தியாலங்கள் வேலை செய்கின்றனர் எனவும் அவர்கள உள்வருகை மற்றும் வெளிச்செல்லல்களிற்காக அவர்களது வரவுப் பதிவேட்டில் குறிப்பிடுவதில்லை எனவும் விடயம் தொடர்பாக தீர்மானம் எதனையும் பல்கலைக்கழக சபை எடுகத்திருக்கவில்லை எனவும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிவித்திருந்தது. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தாபன விதிக் கோவைக்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) IX ஆம் அத்தியயத்தின் 4.1 ஆம் பிரிவு | மேலதிக நேரப் படிகளை பெற்றுக்கொள்ளும் போது மேலதிக நேரக் கடமைகள் | தனியான மேலதிக நேரப் பதிவேட்டை பேணுவதற்கு | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் |

| | | | |
|---|---|---|---|
| | உண்மையாகவும் நியாயமாகவும் ஆற்றப்பட்டுள்ளன என பல்கலைக்கழக பதிவாளர் தனிப்பட்ட ரீதியில் திருப்தியடைய வேண்டும். எனினும் நிறுவகம் முறையான நடைமுறைகளை பின்பற்றியிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | தாபன விதிக் கோவைக்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனிகள் மற்றும் கணனி உப பாகங்கள் தொடர்பாக தனியான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | தனியான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | திறைசேரி சுற்றறிக்கைகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 1,409,514 தொகையான மிகையொன்றாக காணப்பட்டதுடன் ஒப்பிடும் போது அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 4,637,623 தொகையாக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 6,047,137 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீண்டெழும் மானியங்கள் ரூபா 47,993,000 ஆல் அதிகரித்தமை மற்றும் ஒப்பந்தச் சேவை ரூபா 6,576,168 ஆல் வீழ்ச்சியடைந்தமை என்பன இவ் முன்னேற்றத்திற்கான காரணங்களாகும்.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் போது பிரதான வருமானம் மற்றும் செலவினங்களான மீண்டெழும் மானியம் மற்றும் ஆளணி வேதனங்கள் முறையே ரூபா 194,780,000 மற்றும் ரூபா 142,934,500 ஆக இனங்காணப்பட்டிருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் முறையே ரூபா 146,787,000 மற்றும் ரூபா 109,972,827 பெறுமதிகளுடன் ஒப்பிடும் போது 33% மற்றும் 30% ஆல் அதிகரித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| படங்களை வரைந்து வர்ணம் தீட்டுவதற்காகவும் படங்களை காட்சிப்படுத்துவதற்காகவும் கட்புல மற்றும் தொழில்நுட்ப கலை மாணவர்களினால் பயன்படுத்தப்பட்ட உபகரணமொன்றாக உருக்கு | | |

| | | |
|---|---|---|
| வரைபலகை தாங்கி (Steel Easel Stand) காணப்படுகின்றது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br><br>(ஆ) முகாமைத்துவத்தால் 36 உருக்கு வரைபலகைகளின் (Steel Easel) நட்டமான ரூபா 88,804 தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>(ஆ) நிதிப்பிரமாணம் 104 மற்றும் 105 இன் பிரகாரம் முறையே அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் நட்டம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.<br><br>(இ) மேலும் இவ் வரைபலகைகளை (Easels) கொள்வனவு செய்வதற்கு விரிவுரையாளர்களால் மாணவர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மாணவர்கள் அவர்களது கல்விசார் நடவடிக்கைகளிற்காக இவ் வரைபலகைகளை கொள்வனவு செய்வதற்கு ரூபா 1,500 தொடக்கம் ரூபா 4,000 வரையான வீச்சில் பணத்தை செலவிட்டிருந்தனர். இந் நட்டத்தின் விளைவாக மாணவர்கள் அவர்களது கல்விசார் நடவடிக்கைகளில் பல பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | பிரிவில் முறையான பொருளிருப்பு கட்டுப்பாட்டு முறைமை அமுல்ப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் பணிப்பாளரால் நியமனம் செய்யப்பட்ட விசாரணைக் குழுவின் தீர்மானத்தை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (i) சனாதிபதி செயலாளரின் 2006 பெப்ரவரி 26 ஆம் திகதிய சீஎஸ்ஏ/2/3/4 ஆம் இலக்க மற்றும் 2012 யூன் 11 ஆம் திகதிய சீஎஸ்ஏ/1/1/16 ஆம் இலக்க கடிதங்களின் பிரகாரம் கடமை நிமிர்த்தம் வெளிநாட்டிற்கு சென்றிருந்த உத்தியோகத்தர்கள் | உரிய உத்தியோகத்தர்கள் அவர்களது அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்காக நினைவூட்டல்கள் மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. | சனாதிபதி செயலாளரின் அறிவுறுத்தலை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நாட்டிற்கு திரும்பி 2 வாரங்களினுள் உரிய வெளிநாட்டுச் சுற்றுலாவிலிருந்து இலங்கை அரசாங்கத்திற்கு கிடைத்த நன்மைகளை உள்ளடக்கி அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழக நிதியத்திலிருந்து ரூபா 4,873,402 தொகையை செலவிடுவதன் மூலம் வெளிநாடு சென்றிருந்த 05 விரிவுரையாளர்கள் இவ் அறிக்கைத் திகதி வரையிலும் உரிய அறிக்கைகளை சமர்ப்பித்திருக்கவில்லை. | | |
| (ii) | தற்காலிக விரிவுரையாளர் பதவி முடிவுறுத்தப்பட்ட மற்றும் இறந்த நிறுவகத்தின் 02 ஊழியர்களிடமிருந்து ரூபா 3,913,865 கூட்டுமொத்தமான பிணைமுறிப் பெறுமதி 04 ஆண்டுகளிற்கு மேலாக அவர்களது பிணைதாரர்கள் அல்லது அவர்களது சேமலாப நிதியத்திலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | பிணைமுறியை மீறுதல் தொடர்பாக கடமைப் பொறுப்புக்களிலிருந்து விலகியமைக்கான ஊழியரொருவரின் மேன்முறையீடு எம்ஓஎச்ஈ (MOHE) ஆல் கவனத்தில் கொள்ளப்படுதலின் கீழ் தற்போது உள்ளது. பிணைப் பெறுமதியை தீர்ப்பனவு செய்வதற்கு எஸ்வீஐஏஎஸ் இற்கு யூபிஎவ் (UPF) மீதியை மீளளிப்பதற்கு யூஜீசீ (UGC) இற்கு உரிய அனைத்து ஆவணங்களும் அனுப்பப்பட்டுள்ளதுடன் மீதி பெறப்பட்டதும் பிணைமுறிப் பெறுமதி தீர்ப்பனவு செய்யப்படும். | பதவி முடிவுறுத்தப்பட்ட ஊழியரின் பிணைதாரர்கள் அல்லது சேமலாப நிதியத்திலிருந்து பிணைமுறிப் பெறுமதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | நிறுவகத்தால் மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சி நிறுவகத்தின் தரத்தை உயர்த்துவதை விளைவித்து தேசிய பொருளாதாரத்திற்கும் மிகப்பெரிய பங்களிப்பை மேற்கொள்ளும். ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கும் ஆராய்ச்சி மானியங்களை பெற்றுக்கொள்வதற்கும் 46 கல்விசார் பதவியணியினர் தகுதியானவர்களாக காணப்பட்ட போதிலும் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை மானியம் எதுவும் பெறப்படாதமை அவதானிக்கப்பட்டது. இது கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றம் மீதான எதிர் விளைவிற்கு பிரதானமாக | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவகத்தின் தரத்தை உயர்த்துவதற்காக கல்விசார் பதவியணியினர் ஆராய்ச்சி மானியங்களை பெற்றுக்கொண்டு ஆராய்ச்சியை மேற்கொள்ள வேண்டும். |

பங்களித்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2015 நவம்பர் 17 ஆம் திகதிய 15/2015 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளக மாணவர்களிற்கு நடாத்தப்பட்ட பரீட்சைகளின் பெறுபேறுகள் 03 மாதங்களினுள் வெளியிடப்பட வேண்டிய போதிலும் 2014/2015, 2015/2016 மற்றும் 2016/2017 கல்வியாண்டுகளிற்காக நடாத்தப்பட்ட பரீட்சைகளிற்கான பெறுபேறுகள் 3 மாதங்கள் தொடக்கம் 6 மாதங்கள் வரையான காலதாமதமொன்றின் பின்னர் வெளியிடப்பட்டிருந்தன. இந் நடைமுறை சித்தியெய்திய பின்னர் மாணவர்களின் தொழில் வாய்ப்புக்களை மோசமாக பாதித்திருந்தது. | எதிர்காலத்தில் மூன்று மாதங்களினுள் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்படும். | பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக காணப்படுகின்ற சுற்றறிக்கையை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதான பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் டிரீஏ 3123 அரங்க வெளிச்சமூட்டல் பரீட்சையின் (நாடகமும் அரங்கவியலும்) மூன்றாம் ஆண்டுப் பரீட்சைக்காக மிகவும் அவத்தியாவசியமாக இருந்த வெளிச்சமூட்டல் முறைமைகள் (lighting sysmem) 2018 செப்தெம்பர் தொடக்கம் திசெம்பர் வரையான காலப்பகுதியின் போது கொள்வனவு செய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் 2019 மார்ச் 01 வரையிலும் அது கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் மேற்படி டிரீஏ 3123 அரங்க வெளிச்சமூட்டல் பரீட்சை 2018 யூலையில் நடாத்தப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. அரங்க வெளிச்சமூட்டல் முறைமை காணப்படாததன் காரணமாக பரீட்சை 03 மாதங்களிற்கு மேலாக பிற்போடப்பட்டிருந்தது. குறித்த | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | பிரதான பெறுகைத் திட்டத்தை வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| உத்தியோகத்தர்களின் அலட்சியம் மாணவர்களின் கல்விசார் நடவடிக்கைகளை கடுமையாக பாதித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |

## 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர கல்விசாரா பதவியணியினர் 81 ஆக காணப்பட்டதுடன் உள்ளபடியான பதவியணியினர் 44 ஆக காணப்பட்டதனால் 37 வெற்றிடங்கள் காணப்பட்டன. இவ் வெற்றிடம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 45 சதவீதமாக உள்ளது. இந் நிலைமை நிறுவகத்தின் நிர்வாக மற்றும் கல்விசார் நடவடிக்கைகளை கடுமையாக பாதித்திருந்த போதிலும் 03 ஆண்டுகளாக அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர பதவியணியினரை அடிப்படையாகக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) 2018 ஆம் ஆண்டிற்காக நிறுவகத்தால் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர், உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் போன்ற தகவல்களை உள்ளடக்கியிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | உரிய அரச நிதிச் சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயன்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமாப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தை மதிப்பீடு செய்து அளவீடு செய்வதற்கு குறித்துரைக்கப்பட்ட கால எல்லையினுள் |

| | | |
|---|---|---|
| செயன்முன்னேற்ற அறிக்கை காணப்படாததால் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் இலக்குகள் மற்றும் நோக்கங்கள் நிறுவகத்தால் அடையப்பட்டிருந்ததா என்பதனை மதிப்பீடு செய்தல் சாத்தியமற்றருந்தது. ஆகையால் நிறுவகத்தின் ஆக்கபூர்வமான தன்மை மற்றும் வினைத்திறனை அடைந்துகொள்வதற்கு வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தை பயன்படுத்துதல் தொடர்பாக கணக்காய்வின் போது அளவிட்டுக் கூற முடியாதிருந்தது. | | செயன்முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 4.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட 2017 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய என்பி/எஸ்பி/எஸ்டிஜீ/17 ஆம் இலக்க கடிதம் மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரல்’’ என்பவற்றின் பிரகாரம் பல்கலைக்கழகம் அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற தொழிற்பாடுகளை அமுல்ப்படுத்துதல் தொடர்பாக அறிந்திருந்த போதிலும் அத் தொழிற்பாடு தொடர்பான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அவ் இலக்குகளை அடைந்துகொள்வதற்கான இலக்கு கட்டங்கள் மற்றும் இலக்குகளை அடைந்துகொள்வதை அளவீடு செய்வதற்கான சுட்டிகள் என்பவற்றை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கெல்லையின் கீழான செயற்பாட்டை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |